**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 15/2016**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 காளியம்மாள் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) பொதுவாக கிரைய ஆவணத்தில் கிரையம் வாங்குபவர் மற்றும் விற்பவர் இருவரும் கையெழுத்து போடவேண்டும் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையம் வாங்கியவர் மற்றும் விற்பவர் இருவரும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணங்கள் பற்றி தெரியாமல்தான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது முதல் சாட்சிய விசாரணையில் வாதி தரப்பு ஆவணங்கள் பற்றி தெரியாது என்றுதான் சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். நான் சண்முகநாதன் மற்றும் சுந்தரநாதனுக்கு ஈட்டு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தாகத்தான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். ஈட்டுக் கடன் முழுவதையும் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டேனா என்றால் பெற்றுக் கொண்டேன்.

2) மேற்படி ஈட்டுக்கடன் ஆவணம் மற்றும் ரசீதை பார்த்தால் எங்களுக்குள் உள்ள வரவு செலவு பற்றி தெரியும் என்றால் சரிதான். அந்த ஆவணம் என்னிடம் உள்ளது. சொர்ணத்திற்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் நானும், எனது சகோதரி 2ம் பிரதிவாதி மட்டும்தான் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரையம் ஏற்படுத்திய போது வில்லங்க சான்றிதழ் பார்த்துதான் கிரையம் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 3ம் பிரதிவாதி சொர்ணம்தான் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கிரையம் செய்த போது வில்லங்கம் பார்த்து

கிரையம் செய்தாரா என்றால் இல்லை. 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்றுதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) 2013ம் வருடம் எனது தகப்பனார் உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது மகன்கள் 3ம் பிரதிவாதி கிரைய ஆணத்தில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். உரிய உரிமையாளர்களிடம் இருந்து முறையாக 3ம் பிரதிவாதி கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. வாதி உண்மையான உரிமையாளரிடம் இருந்து முறையாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் கிரைய ஆவணம் உண்மையானது என்பதால்தான் அதைப்பொறுத்து உரிய காலத்தில் உரிய சட்ட நடவடிக்கை எதுவும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திய கிரைய ஆவணம் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றும், அவை நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

4) தாவா சொத்து எங்கள் அனுபவத்தில்தான் உள்ளது. வருவாய்துறை ஆவணங்கள் தற்போதுவரை எங்கள் பெயரில்தான் உள்ளது. பி.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றும், அவை தாவா செத்திற்கு சம்பந்தப்படாதது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி முறையாக கிரையம் பெற்றிருப்பதால் எங்கள் சொத்திற்கு பொய்யாக உரிமை கொண்டாட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது கணவர் சொத்திற்கு உரியது என்றும், தாவா சொத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நபர்களின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல.

5) வழக்குரையில் கண்டுள்ள சொத்து விபரத்தில் சர்வே எண்ணிலோ, அளவுகளிலோ எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் இல்லை. எதன் அடிப்படையில் நான் முதல் சாட்சியம் தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால், தாவா சொத்து எனக்கு சொந்தம் என்பதன் அடிப்படையில் வழக்கு நடத்தி வருகிறேன். தற்போதும் தாவா சொத்து எனக்குத்தான் சொந்தம் என சொல்கிறேனா என்றால் ஆமாம். என் தகப்பனாருக்கு ஆண் வாரிசு இல்லாததால் எனக்கும், என் சகோதரிக்கும் சொந்தம் என சொல்கிறேனா என்றால் ஆமாம். வாதி தாவா 1ம் அயிட்ட சொத்தில் கடை வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். என்ன கடை வைத்துள்ளார் என்றால் உரக்கடை வைத்துள்ளார். தாவா சொத்து தரகம்பட்டியில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் இருந்து தரகம்பட்டி பேருந்து நிலையம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால், கூப்பிடும் தொலைவில் உள்ளது.

6) பேருந்து நிலையத்தில் இருந்து வட்டாட்சியர் அலுவலகமும், சார் பதிவாளர் அலுவலகமும் சுமார் 1 பர்லாங் தூரத்தில் உள்ளது. வாதியின் உரக்கடைக்கு முன்புறம் வைரம் செட்டியார் உணவகம் என்ற கடை உள்ளது என்றால் சரிதான். தரகம்பட்டி பேருந்து நிலையம் சுத்துப்பட்டி கிராமத்தினருக்கு மையப்பகுதி என்றால் சரிதான். கிராம மக்கள் பொருட்கள் வாங்கவும், மருத்துவமனைக்கு செல்லவும் இங்குதான் வரவேண்டும் என்றால் சரிதான். நான் இன்றைய தேதியில் தாவா சொத்திற்கு உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள பகுதியில் நிலத்தின் விலை அதிகரித்து விட்டது என்றால் அதுபற்றி தெரியவில்லை. தற்போது இவ்வழக்கை 4ம் பிரதிவாதிதான் நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

7) 4ம் பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில்தான் எனது முதல் சாட்சியம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமில்லாத சொத்தை 4ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கொண்டு பொய்யாக உரிமை கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை வாதி எப்போது தாக்கல் செய்தார்

என்றால் சுமார் 10 வருடத்திற்கும் மேல் இருக்கும். தாவா சொத்து எனக்கு சொந்தம் என பெரியசாமி பண்டாரம் வாரிசுகள் யாரும் தற்போதுவரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொய்யான ஆதாயம் அடைய வேண்டும் என்பதற்காக 4ம் பிரதிவாதியுடன் சேர்ந்துகொண்டு பொய்யாக இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் மைத்துனர் T.S.கண்ணன் என்பவர் தரகம்பட்டியில் இருக்கிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் தோட்ட வேலை செய்து வருகிறார். 4ம் பிரதிவாதிக்கு சொந்தமாக தோட்டம் மற்றும் நிலம் உள்ளதா என்றால் உள்ளது.

8) மேற்படி நிலத்தின் விபரங்கள் குறித்து 4ம் பிரதிவாதிக்குத்தான் தெரியும் என்றால் சரிதான். சுமார் 40 வருடத்திற்கும் முன்பிருந்து தாவா சொத்திற்கு வாதிதான் உரிமையாளர் என்றால் சரியல்ல. வாதியின் உரிமை மூலத்தை ஆட்சேபனை செய்து நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் வாதியின் தாவா சொத்தில் உள்ள உரிமை மூலத்தை எதிர்த்து எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு தாவா சொத்தை விற்றுவிட்டு தற்போது நிலம் விலையேற்றம் காரணமாக வாதிக்கு விற்கவில்லை என பொய்யா எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தவா சொத்தை ஒட்டி உள்ள நிலம் ஒரு செண்ட் சுமார் 15 இலட்சத்திற்கு விற்பனை ஆகிறது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு செலவுத் தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**